1981 ஜனவரி 27]

சான்றிதழ் பெறப்பெற்ற பின்னர் வெட்டப்படுகிறதா என்பதாகும். அந்தக் கேள்விக்குரிய பதிலைத்தான் பேரவையும் எதிர்பார்க்கிறது.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே வெட்டப்படுகிற மாடுகள் முறைப்படி பரிசோதிக்கப்பட்ட பின்னரே வெட்டப் படுகின்றன என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் கால்நடை கிளை நிலையங்கள்.

*வினா எண். 60—திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

தஞ்சையில் தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டம் 50 கிளைகளுடன் இயங்கி வருவதை 100 ஆக விஸ்தரிக்க அரசுக்கு திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : இல்லை.

[முற்பகல் 10-20]

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : தலைவரவர்களே, தமிழகம் முழுவதிலும் இன்று கால்நடை பராமரிப்பு கிளை நிலையங்களில் ஒருசில நிலையங்கள் காலியாக உள்ளன. அவைகள் எவ்வளவு? அந்த நிலையங்களுக்கு, பல கிராமங்களில் இன்றைக்கு ஆய்வாளர்களாகப் பணியாற்றுகிறார்களே, கிரேடு 1, கிரேடு 2 என்று ; அப்படி இருப்பவர்களில் ஒருவரை, ஒரு கிளை நிலையத்திற்கு 30-க்கு குறையாமல் மாடுகள் வந்தால், மாற்றம் செய்து தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பொதுவான கேள்வி அல்ல. தஞ்சை மாவட்டத்தில் 50 கிளைகள் இருப்பதை 100 ஆக அதிகரிப்பது பற்றிய கேள்வி இது.

* வினாக்கள்— விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் *உடுக்குறி இடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

---

* உடுக்குறியிடாத வினாக்கள் 1-200—விடைகளுடன் இணைப்பாக சேர்க்கப்பெற்றுள்ளது.